# திருக்குறள் போட்டி

இணைப்பு: 16

## விசேட அதிமேற் பிரிவு (15 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2007க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## அதிகாரம் 60 - ஊக்கம் உடைமை

குறள் 591

**உடையர் எனப்படுவது ஊக்கம்அ·்து இல்லார்**
**உடையது உடையரோ மற்று?**

***இதன்பொருள்*** - ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

குறள் 592

**உள்ளம் உடைமை உடைமை; பொருள்உடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

***இதன்பொருள்*** - ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

குறள் 593

**ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துஉடை யார்.**

***இதன்பொருள்*** - ஊக்கத்தை உறுதியாகத் தம˙கைப் பொருளாக உடையவர், ஆக்கம் இழந்து விட்ட காலத்திலும் இழந்து விட்டோம் என்று கலங்க மாட்டார்.

குறள் 594

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையா னுழை.**

***இதன்பொருள்*** - சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

குறள் 595

**வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.**

***இதன்பொருள்*** - நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும், மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

குறள் 596

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

***இதன்பொருள்*** - எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ் உயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

குறள் 597

**சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்**
**பட்டுப்பாடு ஊன்றும் களிறு.**

***இதன்பொருள்*** - உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும், யானை தன் பெருமையை நிலைநிறுத்தும் அதுபோல், ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார்.

குறள் 598

**உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு.**

***இதன்பொருள்*** - ஊக்கம் இல்லாதவர், “இவ்வுலகில் யாம் வண்மை உடையேம்“ என்று தம்மைத் தான் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடையமாட்டார்.

குறள் 599

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

***இதன்பொருள்*** - யானை பருத்த உடம்பை உடையது கூர்மையான கொம்புகளை உடையது ஆயினும் ஊக்கமுள்ளதாகிய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

குறள் 600

**உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇல்லார்**
**மரம்மக்கள் ஆதலே வேறு.**

***இதன்பொருள்*** - ஒருவனுக்கு வலிமையானது ஊக்க மிகுதியே. அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே; வடிவால் மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

நன்றி, வணக்கம்.

*(**மூலம்: “திருக்குறள் தெளிவுரை”**, டாக்டர்.மு.வரதராசனார், திருத்திய 144ஆவது பதிப்பு நவம்பர் 1998.)*